Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **STC 383/2025** |
| Deposition of witness for | :: | **PW. 4** |
| Name | :: | **அடால்ப் ஜியோ (மருத்துவர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**
**01.06.2026**
**முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரியில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.03.2024 ம் தேதி நான் விருதுநகர் அரசு மருத்துவமனையில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்தபோது அன்று காலை 11.50 மணியளவில் செல்வம் என்ற 46 வயதுடைய நபர் என்னிடம் மருத்துவ சிகிச்சைக்காக வந்தபோது அவரை 14.03.2024 ம் தேதி காலை 09.30 மணியளவில் பாலவநத்தம் அருகே வைத்து ஒரு நபர் அவரை அடித்துவிட்டதாக என்னிடம் கூறினார். நான் அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு இடதுபக்க பின்தலையில் 6 x 1 cm அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவர் சுயநினைவுடன் இருந்தார். ஆகையால் அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று நான் வழங்கியதுதான். **(விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்ட காயமானது ஒரு நபர் பொருட்களை தூக்கி கொண்டு செல்லும்போது தவறி கீழே விழுந்தால் பின் பக்கம் காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். நான் மேற்படி நபரை பரிசோதனை செய்தபோது அவருக்கு இரத்தம் எதுவும் வரவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:**

**இல்லை**.